21st November 1963]

மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்காக பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1967-ம் ஆண்டு இறுதிக்குள் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இல்லே. 1964-ம் ஆண்டில் தயாரிக்கப்படவிருக்கும் தரைப்படத்துடன் தற்போதுள்ள தரைப்படத்தையும் வைத்து 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்படும்.

(எ) இக்கேள்விக்கு இடமில்லே.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லே.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், இந்தப் பிளானேத் தயாரிப்பதற்கு வெளிநாட்டுக்காரர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்தத் தகவல் என்னிடம் இல்லே.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸார், மாஸ்டர் பிளான் தயாரிக்கும்போது அரசாங்கமே எல்லா முடிவுகளையும் செய்து விடுமா, அல்லது மக்கள் பிரதிநிதிகளேக் கூப்பிட்டு அவர்களுடைய கருத்தையும் கேட்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தப் பிளானேத் தயாரிப்பது 'டெக்னிகல் மாட்டர்'. பொதுமக்களுக்கு எவ்வளவு சௌகரியங்கள் செய்யவேண்டுமோ, அந்த வகையில் 'டெக்னிகல் பர்ஸானல்களே' செய்வார்கள்.

Residential houses (Madras City)

* 404 *Q*.—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that residential houses have been converted into non-residential places in Madras City from 1957; and

(*b*) what steps the Government propose to take to prevent this in view of the shortage of houses in the City of Madras.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) With the increase of business and commerce, a certain amount of conversion of residential premises into non-residential premises might have taken place.

(*b*) Conversion of a residential building located in a shopping area or an industrial area is not prohibited and cannot be prevented. Such conversion in an area reserved as residential under the Madras Public Health Act is also not prohibited so long as the building so converted is not utilised for running a dangerous and offensive trade or for working power driven machinery other than for approved cottage industries. In a Town Planning Scheme area conversion of residential premises into non-residential is totally prohibited; however shops of specified sorts are allowed in a particular pattern and are expressly

[21st November 1963

provided in the scheme itself. With the implementation of the Master Plan for the city, it is expected some control over such conversions will be possible.

Residential areas in Madras City

* 405 *Q.*—Sri K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) which are residential and non-residential areas in Madras City; and

(*b*) the details of the classifications?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*) A statement showing the zoning of areas and the details of classification is placed in the Legislature Secretariat Library.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், குடியிருப்புப் பகுதிகளில், வாடகைக்காக ஆசைப்பட்டு அநேகம் பேர் கடைகளை வைத்து விடுகிறார்கள். அதனால் நெருக்கடி ஏற்பட்டு சுகாதார நிலைமை பாதிக்கப்படுகிறது. ஆகவே குடியிருப்புப் பகுதிகளில் இனி மேலாவது கடைகள் ஏற்படாமல் இருக்க விதி செய்யப்படுமா?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: My answer to the main question would cover the supplementary question put by the hon. Member.

காகிதத் தொழிற்சாலைகள்

* 406 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நாட்டில் எங்கெங்கு காகிதத் தொழிற்சாலைகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) இவ்வாறு அனுமதி வழங்கப்பெற்ற தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள் அருகில் அமைந்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) During 1963 three licences have been granted to set up paper mills one at Pettavaithalai in Tiruchirappalli district another at Nambivayal in Thanjavur district and the third in the same district.

(இ) There is no such stipulation in the industrial licence.

பிளாஸ்டிக் தொழிற்சாலை

* 407 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடி தாலுகாவில் உள்ள ஆதனக்கோட்டை, பாப்பான் விடுதி, வல்லத்திராகோட்டை, திருவரங்குளம் போன்ற பகுதியில் முந்திரி அதிகமாக விளைகின்ற காரணத்தினால் அங்கு ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இல்லை.